# இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2019 (2022)

கௌரவ பிரதமர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.11.08 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் PA/HRD-03/52/2022 இற்கு கிடைக்கப்பெற்ற அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் அமை/22/1784/605/011-I மற்றும் 2022.11.29 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, 2022.04.24 ஆந் திகதி நடத்தப்பட்ட மேற்குறித்த போட்டிப் பரீட்சையில் சகல பாடங்களுக்கும் தோற்றி ஒவ்வொரு பாடத்துக்கும் நூற்றுக்கு நாற்பது (40%) குறையாமல் பெற்று சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் முழுப் புள்ளிகளின் கூட்டுத்தொகையில் திறமை ஒழுங்கு அடிப்படையின் கீழ், நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான விண்ணப்பதாரிகள் உள்ளடங்கிய வகையில் தயாரிக்கப்பட்ட பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2022.10.12 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெறுபேற்றாவத்தின் கீழே உள்ள அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III க்கு நியமனம் செய்வதற்கான தகுதிகளை பரீட்சிப்பதற்குரிய நேர்முகப் பரீட்சைக்கு 2022 டிசம்பர் மாதம் 16 ஆந் திகதி அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அந்த பெறுபேற்று அட்டவணையில் பெயர் இருப்பதனால் மாத்திரம் இலங்கை அரச நூலகர் சேவையின் தரம் III க்கு ஆந் தரத்திற்கு நியமனம் பெறுவதற்கான தகுதியாக அமைய மாட்டாது என்பதனைக் கருத்திற்கொள்ளவும். நேர்முகப் பரீட்சையில் அடிப்படைக் கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை அரச நூலகர் சேவையின் III ஆந் தரத்துடைய பதவியில் நியமிக்கப்படவுள்ளார்கள். இந்த ஆட்சேர்ப்பு இலக்கம் 2024/35 மற்றும் 2017.06.21 ஆந் திகதிய இலங்கை அரச நூலகர் சேவைப் பிரமாணத்தின் ஏற்பாடுகள், இலக்கம் 2186 இனையுடைய 2020.07.24 ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சை அறிவித்தல் மற்றும் இலக்கம் 2225 இனையுடைய 2021.04.23 ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அப்பரீட்சை அறிவித்தல் திருத்தங்களுக்கு ஏற்ப நடைபெறும்.

ஒப்பம் ./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்